# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 08 ஆகஸ்ட் 2026 தனிபிரதி ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-

Vol:12 Issue No:08 August 2026 Single Copy Rs. 20/- Annual Subscription Rs. 200/-






## வாங்கி விட்டீர்களா?

**Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள்
எழுதிய பரலோக அனுபவங்கள்
மற்றும் ஆவிக்குரிய இரகசியங்கள்
அடங்கிய புதிய புத்தகம்!

# பரலோகமே என் சொந்தமே

விலை ரூ.300 மட்டுமே (தபால் செலவு தனி)

**மேலும் விபரங்களுக்கு**
**செல்: 9488845627**

## அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி செய்வோருக்கான சிறப்பு பிரார்த்தனை கூட்டம்





பிரியமானவர்களே, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிசெய்கிற உங்களுடைய ஆசீர்வாதங்களுக்காகவும், நீங்கள் செய்கிற வேலையில் மகிழ்ச்சியாயிருக்கவும், நல்ல சம்பளம் மற்றும் பதவி உயர்வு கிடைப்பதற்காகவும், மேலும் உங்கள் பணியில் சந்திக்கும் பல்வேறுவிதமான கஷ்டங்களிலிருந்து விடுபட கர்த்தர் உதவி செய்யும்படியாகவும், உங்கள் பணி சம்பந்தமான அனைத்து காரியங்களுக்காகவும் விசேஷித்த ஆலோசனைகள் வழங்கி பிரார்த்தனை செய்வதற்காக இந்த சிறப்பு கூட்டத்தை நாங்கள் ஒழுங்கு செய்துள்ளோம். எனவே இந்த நல்ல வாய்ப்பை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**நாள்: 15.8.2026** சனிக்கிழமை (அரசு விடுமுறை)
**நேரம்:** காலை 9:30 மணி முதல் 12:30 மணி வரை
**இடம்:** அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10–வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு,
தில்லைநகர், திருச்சி–18

**குறிப்பு**

- முன்பதிவு அவசியம். **9942166066** என்ற எண்ணிற்கு அழைத்து முன்பதிவு செய்யவும்.
- இந்த கூட்டத்திற்கு முதலில் வருகிற 20 பேருக்கு பரிசு வழங்கப்படும்.
- பங்கு பெறுகிற அனைவருக்கும் தேனீர் மற்றும் மதிய உணவு கொடுக்கப்படும்.



ஆலோசனையும் ஜெபமும்
**Rev.Dr.A. ஜாஷ்வா**

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த விடுதலையின் மாதத்தில் உங்களுடைய வாழ்க்கையிலும் உண்மையான விடுதலை உண்டாக ஜெபத்தோடு எழுதுகிறேன்.

சுதந்திரதினத்தை நினைவுகூரும் நாம் விசேஷமாக நம் தேசத்திற்காகவும் மாநிலத்திற்காகவும் ஜெபிப்போம். கொடூர மான காலங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்த காலத்தில், நம் தேசத்து மக்கள் அனைவரும் உண்மையான சகோதரத்துவம், ஒற்றுமை இவைகளால் கட்டப்பட்டிருக்க வேண்டும். அதற்கு நம்முடைய ஜெபங்கள் மிகவும் அவசியம் ஆகும். நாம் ஜெபிக்கும் பொழுது உண்மையாகவே கர்த்தர் நம் தேசத்தில் உள்ள சகல குறைவுகளையும் நீக்கி, சமாதானத்தையும், பரிபூரணத்தையும் கட்டளையிடுவார்.

**ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன் எரேமியா 31:14**

இங்கு கொழுமை என்பதை ஆங்கில வேதாகமத்தில் Fully Satisfies, Abundance என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வழிந்தோடுகின்ற, போதுமென்கின்ற, மீதம் எடுக்கத்தக்கதான ஆசீர்வாதம். இந்த மாதத்திலும் கர்த்தர் அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை உங்களுக்கு கொடுப்பார். சோர்ந்து போகாதீர்கள். அவரையே பற்றிக்கொண்டிருங்கள். உலக பிரகாரமான காரியங்களில் மாத்திரமல்ல, உங்களுடைய ஆவிக்குரிய, மாம்ச பிரகாரமாக நீங்கள் எடுக்கிற அனைத்து பிரயாசங்களிலும் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.


**ஆசிரியர் / வெளியிடுபவர் : Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ. 200/- ஆயுள் சந்தா ரூ. 2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 1500/- ஆயுள் சந்தா ரூ. 15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 94888 45627
தெலுங்கு : + 91 99445 36343
மலையாளம் : + 91 94889 32937

E-mail : info@mojindia.org Website : www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003
Address : Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

எங்களுடைய அப்பாவின் சுகத்திற்காக ஜெபித்து, அன்போடு விசாரித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவிக்கிறோம். தொடர்ந்து அப்பாவின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். இந்த மாதம் திருச்சி, மாங்கரை, செகந்திராபாத், சென்னை ஆகிய இடங்களில் நடைபெறுகிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் பகுதிகளில் நடைபெறுகிற கூட்டத்தில் தவறாமல் வந்து கலந்துக் கொள்ளுங்கள். உங்கள் பகுதிகளில் கூட்டங்களை நடத்தவேண்டும் என்கின்றவர்கள் எங்களை தொடர்புகொள்ளுங்கள்.

Ministry of Jesus youtube சேனல் வாயிலாக Level up என்ற புதிய நேரலை நிகழ்ச்சிகள் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. நீங்கள் தவறாமல் பார்த்து பயன்பெறுங்கள். உங்களுடைய வாட்ஸ் அப் எண்ணை மறவாமல் தெரியப்படுத்துங்கள். புதிய பாடல்கள் வெளிவர ஜெபியுங்கள்.

ஆத்துமாக்களின் அறுவடையில் நீங்களும் பங்கு பெறுங்கள். அன்பரின் ஊழிய பத்திரிக்கை வேண்டுவோர் 8098742638 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். அன்பரின் ஊழிய பத்திரிக்கையை நீங்கள் தொடர்ந்து பெறுவதற்கு வசதியாக உடனே வருடசந்தா ரூ.200/-அனுப்பும் படியாக கேட்டுக்கொள்கிறேன். S.J.Saves Trust பணிகளுக்காகவும் ஜெபியுங்கள். தொடர்ந்து தாங்குங்கள்.

வேதாகம குறுக்கெழுத்துப்போட்டியில் நீங்கள் அனைவரும் பங்கு பெறுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுகத்திற்காகவும், பயணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.

<u>கிறிஸ்துவின் பணியில்</u>

Dr. ஜேன் ஜாஷ்வா
*jane@mojindia.org*




**Telugu WhatsApp No**
**+ 91 91770 87860**



# பலன் அளிக்கிறவர்

தேவ செய்தி: Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான பங்காளர்கள் ஒவ்வொருவரையும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த புதிய மாதத்திலும் கர்த்தர் உங்களுக்கு தருகின்ற தேவசெய்தி மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற வாக்குத்தத்தம், **தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். எபி.11:6-ன்** படி நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து நமக்கு பலன் அளிக்கிறவர் என்ற தலைப்பில் நாம் தியானிக்க இருக்கின்றோம். எந்நாளும் எப்பொழுதும் நாம் ஆண்டவரை தேடும்பொழுது அவர் நமக்கு பலன் தருகிறவராக இருக்கிறார். இன்றைய தலைமுறையினரைப் பார்த்து, ஆண்டவர் இருக்கிறாரா? என கேள்வி கேட்கும் பொழுது சரியான பதில் கிடைப்பது இல்லை. ஏனென்றால் நவீன உலகத்தில் மிகச்சிறந்த, அறிவுப்பூர்வமான காரியங்கள் மற்றும் சாதனைகளை மனிதன் படைத்துக் கொண்டிருக்கும் பொழுது இதைவிட பெரிய ஒருவர் இருக்க முடியுமா? என்ற மேட்டிமையான ஒரு எண்ணம் மனிதருக்குள் காணப்படுகின்றது. இப்படியாக பிசாசு மனிதர்களின் மனதை மாற்றிக் கொண்டிருக்கிறான்.

இன்னொரு விதமான மக்கள், "நாங்கள் ஆண்டவரை தேடுகிறோம். ஆனால் எங்களுக்கு பதில் வருவதில்லை" என்று கூறுவர். பிசாசு ஆண்டவரை தேடாதே என சொல்லமாட்டான். ஆனால் ஆண்டவரை தேடக்கூடாதபடி தடைகளை கொண்டு வருகிறான். ஆண்டவரை தேடாதபடி பெலவீனங்களை, சோர்வுகளை, நோய்களை, கொண்டு வருவான். உலகத்தின் கவர்ச்சிகளை, மனிதனை கவரக்கூடிய சில காரியங்களை கொண்டு வந்து, அவைகளின் மீது ஒருவித ஈர்ப்புத்தன்மையை ஏற்படுத்தி ஆண்டவரை தேடக்கூடாதபடி தடை செய்கிறான். இவ்வாறு நம்மையும் அறியாமல் நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கிறோம். **எபி.11:6-ல் அவரை தேடுகிறவர்களுக்கு அவர் பலன் தருகிறவர்** என வேதம் சொல்லுகிறது. பலன் என்றால் பரிசு, ஒரு வெகுமதி என அர்த்தம். நாம் எந்த ஒரு காரியத்தை செய்தாலும் ஒரு எதிர்வினை உண்டு. உதாரணமாக நன்கு படித்தால் நன்கு மதிப்பெண் எடுக்கலாம். குறிப்பிட்ட இந்த நேரத்தில் மழை பெய்தால் விவசாயம் செழிக்கும். இவ்வாறு ஆண்டவரை தேடுவோர்க்கு அவர் பலன் அளிக்கிறவராக இருக்கிறார். எப்படி பலன் தருகிறார்? **தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். ரோமர் 2:6-ன்** படி அவர் நமது கிரியைகளுக்கு தக்கதாய் பலன் அளிப்பார் என வேதம் உறுதியாக சொல்லுகிறது. அத்துடன் அவர் அரசாளுகிறவராக வரும்

பொழுது, அவர் தருகிற பலனும் அவரோடு வருகிறது என ஏசாயா தீர்க்கதரிசி கூறியிருக் கிறான். **இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார், அவர் தமது புயத்தினால் அரசாளுவார், இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது, அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது. ஏசாயா 40:10** ஆம், மனிதன் என்ன செய்தாலும் அதற்கு பலன் தருகிறவர் நம் ஆண்டவராகிய கர்த்தர். இங்கு நம்முடைய பலன் யாரிடமிருந்து வருகிறது? தேவனாகிய கர்த்தரிடமிருந்து வருகிறது. **நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது, இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். பிரசங்கி 2:10. இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு. பிரசங்கி 5:18**

ஆண்டவராகிய தேவன் இருக்கிற காரணத்தினால்தான் நம் செயலுக்கு ஏற்ற பலனை நாம் பெற்றுக்கொள்கிறோம் என்பதை மறக்கக்கூடாது. பலன் அளிக்கிறவர் கர்த்தர் ஒருவரே. உதாரணமாக, ஒரு அலுவலகத்தில் பலர் வேலை செய்யலாம். ஆனால் பதவி உயர்வு ஒரு சிலருக்கு மட்டுமே தரப்படும். இதற்கும் ஆண்டவருடைய அநுக்கிரகம் வேண்டும். ஆண்டவருடைய செயல் அங்கு நிறைவேற வில்லையென்றால் நமக்குரிய பலனையும் நாம் இழந்துவிடுகிறவர்களாக காணப்படுவோம். அத்துடன் நமக்குரிய பெலனை நமக்கு அளிக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தர். பலன் அளிக்கிற ஆண்டவர் யார் யாருக்கு பலன் தருகிறவராக இருக்கிறார் என்பதை தொடர்ந்து தியானிப்போம்.

## உங்கள் ஜெபத்திற்கு கர்த்தர் பலன் அளிக்கிறவராக இருக்கிறார்!

**ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்ச மான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள். சங்.65:2**

ஆண்டவர் என் ஜெபத்தை கேட்பாரா என்ற கேள்வி உங்களுக்கு அடிக்கடி வரும். ஒரு சிலருக்கு இப்படி ஜெபித்தும் பல வருடங்களாக பதில் வராமல் இருக்கலாம். ஆனால், "நான் நிச்சயமாக உன் ஜெபத்தை கேட்டு பதில் தருகிறேன், பலன் அளிக்கிறேன்" என கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். **கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுவார். சங்.6:9. யோபு 42:10ல்** யோபு தன் சிநேகிதருக்காக ஜெபித்தான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் என பார்க்கிறோம். அவன் அதிகமான பாடுகளை அனுபவித்தப் பொழுதும், ஆண்டவரை விட்டு விலகவில்லை. ஆண்டவரை மட்டுமே நாடினான். இரண்டத் தனையாய் பலனை பெற்றுக் கொண்டான். யோபுவின் ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் தருவதற்கு இன்னொரு காரணம் உண்டு. அது தேவன் மீது அவன் வைத்திருந்த நம்பிக்கை. **யோபு 13:15-ன்** படி **அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்** என்ற உறுதியோடு இருந்தான். எனவே தான் ஆண்டவர் அவனுக்கு பதில் தந்தார்.

இயேசு கிறிஸ்து மத்தேயுவில் ஜெபத்தைக் குறித்து சொல்லும்பொழுது, நம்மைப் பார்த்து அந்தரங்கத்தில் ஜெபிக்கும்படி சொல்லுகிறார். **நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப்**

**பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். மத்தேயு 6:6** ஆம், நீங்கள் ஜெபிக்கும்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாக உங்களுக்கு பலன் தருவார். நீங்கள் அந்தரங்கத்தில் ஜெபிக்க கற்றுக்கொள்ளுங்கள். சில காரியங்களுக்கு நாம் போராடி ஜெபிக்க வேண்டும். சில நேரத்தில் இந்த அந்தரங்க ஜெபம் சரியானதாக இருக்கும். ஆனால் சில காரியங்களுக்கு நாம் போராடி ஜெபிக்கவும் வேண்டியிருக்கிறது.

உதாரணமாக வேதத்தில் வருகிற கானானிய ஸ்திரீயைக் குறித்து பார்ப்போம். அவள் இயேசுவிடம் வந்து ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என ஆண்டவரை விடாது கூப்பிட்டுக்கொண்டே இருந்தாள். அப்பொழுது இயேசு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அவள் விடவில்லை. தொடர்ந்து கூப்பிட்டுக்கொண்டே இருந்தாள். சீடர்கள், இயேசுவிடம் "இவளை அனுப்பிவிடும்" என சொன்னபொழுதும், அவள் சோர்ந்து போகவில்லை. மீண்டும் "ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்" என்று கெஞ்சிகேட்டாள். அப்பொழுது இயேசு சொன்ன பதிலைக்கேட்டு அவள் தாழ்மையாகவே நடந்துக்கொண்டாள். இயேசுவிடம், அந்த ஸ்திரீ, தன்னை இன்னும் தாழ்த்திக்கொண்டு, "நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" என்றாள். உடனே இயேசு, "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரியது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். **(மத்.15:22-28)** சில நேரத்தில் நாம் நம்பிக்கை இழந்தவர்களாகி, கானானிய பெண்ணைப் போன்று போராடி ஜெபிப்பதில்லை. நீங்கள் போராடி ஜெபிக்கும்பொழுது, உங்களுடைய ஒவ்வொரு ஜெபமும் நிச்சயமாக பதிலை கொண்டு வரும். அதிக பலன்களை தரும், அதிசயங்களை நடப்பிக்கும். போராடி கண்ணீரோடு ஜெபிக்கும்பொழுது, இயேசு, "இந்த நேரத்தில் என் மகள் கண்ணீர் வடித்தாள், என்னை நோக்கி கூப்பிட்டாள்" என ஆண்டவர் பதிவு (record) செய்துக்கொள்வார். உங்களுடைய ஒவ்வொரு ஜெபமும் பதிலை கொண்டு வரும் என ஆண்டவர் சொல்லுகிறார்.

எலியா மகா பெரிய தீர்க்கதரிசி. 1 இராஜாக்கள் 18ம் அதிகாரத்தில் மக்களிடம் கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளைப் பார்த்து, 'இவர்கள் உங்கள் பெற்றோர் இல்லை' என சொன்னதைக் கேட்டு, அந்த பிள்ளைகள் தன் பெற்றோரை சந்தேகப்பட்டால், அந்த பெற்றோர் அதிக வேதனையடைவார்கள். அதேப்போல தான் இங்கு மக்கள் ஆண்டவரை சோதிப்பதற்கு இடம் தருகின்றார்கள். எலியா முதலில் பலிபீடத்தை செப்பனிடச் சொன்னான். அதன்பின் தண்ணீரையும் ஊற்றினான். தொடர்ந்து "என்னை கேட்டருளும் என்னை கேட்டருளும்" என சிறிய ஜெபம் செய்தான். அக்கினியை அனுப்பி தேவன் பதில் தந்தார். அக்கினி மூலமாக பதில் தருகிறவர் இன்றும் உங்கள் மத்தியில் ஜீவிக்கிறார். அதன்பின் எலியா தீர்க்கதரிசி ஆகாப் ராஜாவிடம், "பெருமழையின் இரைச்சல் கேட்கிறது. உன் இரதத்தைப் பூட்டிக்கொண்டு செல்" என்கிறான். அந்த பெருமழையின் இரைச்சல் கேட்பதற்கு எலியா என்ன செய்தான்? தன் முகம் தரையில் படும்படி முழங்காலிட்டு இரங்கும் என ஜெபித்து கெஞ்சுகிறான். கர்த்தர் பதில் தந்தார் இதையே **யாக்கோபு 5:16-ல்** நீதிமானுடைய ஊக்கமான ஜெபம் மிகுந்த பலனுள்ளதாயிருக்கிறது என எழுதப்பட்டுள்ளது.

"எலியா தீர்க்கதரிசி நம்மைப்போல பாடுள்ள மனுஷனாக இருந்தான். மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மீண்டும் ஜெபம் செய்தான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது." ஆம், பிரியமானவர்களே, எலியாவைப்போல இயற்கையை கட்டுப்படுத்துகிற அதிகாரம், தேசத்தை ஆளுகிற அதிகாரம் நமக்கு தரப்பட்டிருக்கிறது. ஆம், நாம் போராடி ஜெபிக்க வேண்டும். அந்த ஜெபம் மிகுந்த பலன் உள்ளதாக இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**1சாமுவேல் 1:15-ல்** அன்னாள் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். அவளுக்கு குழந்தை இல்லை. உடனிருந்தவர்களின் ஏளனப்பேச்சு, ஒருவித தனிமை அவளை நெருக்கியது. அவள் அதிலேயே மூழ்கி விட வில்லை. எழுந்து தேவ சமூகத்திற்கு சென்று அழுது விண்ணப்பித்தாள். அவளுடைய ஜெபத்தின் பலனாக தீர்க்கதரிசியாகிய சாமுவேல் பிறந்தான். இங்கு அன்னாள் விண்ணப்பித்த படியே ஆண்டவர் அவளுக்குச் செய்தார்.

உங்கள் வாழ்க்கையில் வருகிற கஷ்டங்களை பார்த்து ஆண்டவர் இருக்கிறாரா என சந்தேகப்பட்டு விடாதீர்கள். நான் தப்பு எதுவும் செய்யவில்லையே இது இப்படி நடந்து விட்டதே என யோசித்துக்கொண்டு இருக்காதீர்கள். ஒன்றை மட்டும் நான் சொல்ல முடியும். ஆண்டவர் இருக்கிற காரணத்தினால் தான் நாம் இன்றும் உயிரோடு இருக்கிறோம். நாம் உயிரோடு இருப்பது அவருடைய கிருபை ஒன்றே. ஆகவே இன்று முடிவெடுங்கள். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் நான் என் ஜெபத்தை விடமாட்டேன் என உறுதியாக இருங்கள். உலகமே தலைகீழாக போனாலும் உங்கள் ஜெபத்தில் உறுதியாக இருங்கள். விசுவாசத்தில் அசையாதிருங்கள். பிரியமான வர்களே, நம் தேவன் உங்கள் ஜெபத்திற்கு பதில் தருகிறவராக, பலன் அளிக்கிறவராக எப்பொழுதும் இருக்கிறார். ஆகவே எந்த நேரத்திலும் ஊக்கமான ஜெபத்தை ஏறெடுக்க மறவாதீர்கள். அன்னாள், "நான் விண்ணப்பித்த படியே எனக்கு கர்த்தர் செய்தார்" என சொன்னாள். எலியா சிறு ஜெபம் மாத்திரம் செய்தான், எலியாவுக்கு பதில் தந்த தேவன், அன்னாளுக்கு பதில் தந்த தேவன் உங்களுக்கும் பதில் தருவார். உலகத்தின் கஷ்டங்களை பார்த்து, ஆண்டவர் இருக்கிறாரா? என கேள்வி வரும். நிலையற்ற இந்த உலகில் ஆண்டவர் நம்மை வாழ வைத்துள்ளார். அவர் உங்களை கைவிடமாட்டார்.

## உங்கள் கிரியைகளுக்கு கர்த்தர் பலன் தருகிறவராக இருக்கிறார்!

**உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக . ரூத் 2:12**

இன்றைக்கு உலகப்பிரகாரமாக கடுமையாக உழைத்து, பல முயற்சிகளை செய்து ஒன்றும் வாய்க்கவில்லையென்றால் உடனே நாம் சோர்ந்து போகிறோம். நாம் விரும்புவது கிடைக்கவில்லை என்றால் அப்படியே முடங்கி போய்விடுகிறோம். முயற்சி மட்டும் போதாது. ஆண்டவருடைய கிருபையும், அநுக்கிரகமும் நமக்கு வேண்டும். கர்த்தருடைய பிள்ளை களாகிய உங்கள் ஒவ்வொருவருடைய கிரியை களுக்குத்தக்க பலனை ஆண்டவர் தருகிறவராக இருக்கிறார். உதாரணமாக ரூத் புத்தகத்தில் வருகிற சம்பவத்தை அனைவரும் நன்கு அறிந்திருப்போம்.

**ரூத் 2:12-ல்** போவாஸ், ரூத்தைப் பார்த்து, **உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக...... உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக** என சொல்வதை பார்க்கிறோம். அவள் வாழ்க்கையில் நடந்தது என்ன? பெத்லெகேம் ஊரில் எலிமெலேக்கு என்ற ஒரு மனுஷன் இருந்தான். அவன் மனைவி பெயர் நகோமி. அவர்களுக்கு இரு மகன்கள் இருந்தனர். அங்கு ஏற்பட்ட பஞ்சத்தின்போது, அவன் தன் மனைவியோடும் இரண்டு மகன்களோடும் புறப்பட்டு, மோவாப் தேசத்திலே போய் வாழ்ந்து வந்தான். அவருடைய இரண்டு மகன்களும் அந்த தேசத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மண முடித்துக்கொண்டனர். பத்து வருடங்களுக்குப் பிறகு எலிமெலேக்கும் இறந்து விட்டார். மகன்கள் இருவரும் இறந்துவிட்டனர். அதனால் நகோமி தன் சொந்த ஊரான பெத்லெகேமிற்கு திரும்புகிறாள். மூத்த மருமகள் ஓர்பாள் தன் தேசத்திலேயே இருந்துவிட்டாள். இளைய மருமகள் ரூத்தோ தன் மாமியாரை விட வில்லை. அதற்கு மாறாக "இனி உம் ஜனம் என்னுடைய ஜனம், உம் தெய்வம் என் தெய்வம்" என கூறி நகோமியுடன் பெத்லெகே மிற்கு வந்து விட்டாள். இதுதான் அவள் செய்த ஒரு நல்ல செயல். இங்கு வந்த பிறகு வயதான தன் மாமியாருக்கு கீழ்ப்படிந்து, அவள் சொன்னபடி அனைத்தையும் செய்து வந்தாள். இறுதியில் நகோமியின் உறவினரான போவாஸ் ரூத்தை மணமுடிக்கிறான். அவர்களுக்கு ஒரு மகன் பிறக்கிறான். இங்கு ரூத்தின் கிரியைக்கு ஏற்ற பலனை ஆண்டவர் தந்தார். ரூத் தானாக எதையும் தேடி செல்லவில்லை. அங்கு ஆண்டவர் அனைத்தையும் அவளுக்கு வாய்க்கச் செய்தார்.

சரித்திரபடி ரூத் மோவாபிய தேசத்தில் கோயில் பூசாரிக்குரிய வேலைகளை செய்கிற வளாக இருந்தாள். அவளுடைய சொந்த தேசத்தில் இருந்திருந்தால் உலக வழக்கத்தின் படி அவள் நன்றாக இருந்திருக்கலாம். இங்கு நகோமியோடு சேர்ந்து, தன் இனம், ஜனம், தெய்வம் அனைத்தையும் விட்டுவிட்டு நகோமியை பற்றிக்கொண்டு, இஸ்ரயேலின் தேவனை சார்ந்து வந்த அவளுடைய செயலை தேவன் மறக்கவில்லை. அதற்குரிய நிறைவான பலனை தந்தார். ரூத்திற்கு பிறந்த குமாரனாகிய ஓபேத்தின் மூலமாக நகோமியின் குடும்பம் மீண்டும் கட்டப்பட்டது. ஒன்றுமில்லாமல் போன நகோமியின் குடும்பம் ரூத்தின் மூலமாக செழிப்பானது. ரூத் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெறக்கூடிய கிருபையை கர்த்தர் தருகிறார். **போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான், ஓபேத் ஈசாயை பெற்றான், ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான்...... யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான், அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார். (மத்.1:1-16)** இயேசுவின் வம்ச வரலாற்றில் அவள் காலத்தில் இருந்த வேறு எந்த பெண்களையும் குறித்து வேதத்தில் எழுதப்பட வில்லை. கர்த்தர் முன்பாக ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. ஆம், கர்த்தர் தம்மை தேடின பெண்ணாகிய ரூத்திற்கு நிறைவான பலன் அளிக்கிறவராகவே இருந்தார். **சங்கீதம் 128:2-ல் உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.** என எழுதப் பட்டுள்ளது. இவ்வாறு உங்களுக்கும் கர்த்தர் பலன் தருவார். உங்கள் தலைமுறைகளுக்கும் கர்த்தர் பலன் தருவார். பல ஆண்டுகள் கழித்தும் கூட உங்கள் கிரியைகளுக்கு ஏற்ற பலனை ஆண்டவரால் தரமுடியும்.

அடுத்து வேதத்தில் இன்னொரு அருமையான நபர் யோசேப்பு பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். யோசேப்பு அடிமையாக கொண்டு போகப்பட்ட எகிப்து தேசத்தில் தனியாக இருந்தான். அந்த நேரத்தில் அவனை கண்காணிக்க யாரும் இல்லை. ஏன் என கேள்வி

கேட்க சொந்தங்கள் யாரும் இல்லை. அந்த நிலையிலும் அவன் தேவனுக்கு முன்பாக பாவம் செய்யாதபடி தன்னை காத்துக் கொண்டான். என் எஜமான் எல்லாவற்றையும் என்னிடம் கொடுத்துள்ளார். ஆண்டவருக்கு முன்பாக நான் எப்படி பாவம் செய்வேன் என கூறி, அந்த இடத்தை விட்டு ஓடினான். அவனுடைய அந்த கிரியையை ஆண்டவர் பார்த்தார். அவனுடைய அந்த கிரியைக்குரிய பலனாக ஆண்டவர் பெரிய உயர்வை கட்டளையிட்டார். இவ்வாறு நற்கிரியைகளை செய்கிற தேவ பிள்ளைகளுக்கு கர்த்தர் பலன் அளித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

ஆபிரகாம் மிகப்பெரிய செல்வந்தனாக இருந்தார். அதன்பின் ஈசாக்கை குறித்து பார்க்கி றோம். ஈசாக்கிற்கு அபிமெலேக் ராஜாவுடன் பிரச்சனை வந்தது. ஆனாலும் தேவன் அவனை கைவிடவில்லை. ஈசாக்கு விதை விதைத்து நூறு மடங்கு பலன் அடையும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம் செய்தார். **ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான், கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். ஆதியாகமம் 26:12** இது தான் கர்த்தர் கொடுக்கிற பலன். இந்த பலன் உங்களுக்கு வேண்டுமா? இன்றைக்கு நீங்களும்கூட எனக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது, இந்த காரியம் ஒன்றுமில்லாமல் முடங்கிப்போய் இருக்கிறது என கலங்கிக் கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் செய்கிற வேலை அதிகமாக இருந்துக்கொண்டே இருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள். ஆனால் ஆண்டவர் உங்களுக்கும் நூறு மடங்கு ஆசீர்வாதத்தை தருவதற்கு வல்லவரா யிருக்கிறார்.

ஒரு உண்மை சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். கர்த்தருக்கு பயந்து வாழுகிற, விவசாயம் செய்கிற ஒரு நபர் நம் திருச்சி கூட்டத்திற்கு தொடர்ந்து வருவார். இவர் குடும்பத்தில் இவர் மட்டும் இரட்சிக்கப்பட்டவர். சில வருடங்களுக்கு முன் பயங்கரமான புயல் வந்தது. புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு தந்தது. அந்த நேரத்தில் திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு அந்த நபர் பெரிய வாழைத்தாருடன் வந்து சாட்சி சொன்னார். புயல் வந்த நேரத்தில் அவர் ஆண்டவரை நோக்கி, "நான் ஜெப எண்ணெய் தெளித்து, இந்த வாழைகளை வைத்திருக்கிறேன். ஆகவே அந்த புயல் என்னுடைய வாழையை எவ்விதத்திலும் பாதிக்கக்கூடாது" என ஜெபித்துள்ளார். அந்த ஊரில் உள்ள பல ஏக்கர் தோட்டமும் புயலினால் பாதிக்கப்பட்ட பொழுதும், ஆண்டவர் இவர் ஜெபத்தைக் கேட்டு, இவருடைய தோட்டத்தில் ஒரு வாழை கூட சாயாமல், எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாதபடி கர்த்தர் பாதுகாத்துக்கொண்டார். அவற்றில் கிடைத்த பலனை ஆண்டவருக்கு காணிக்கையாக கொண்டு வந்துள்ளேன் என்றார். இத்தகைய அற்புதத்தை செய்கிறவர் ஆண்டவர். உங்களை யார் தாழ்த்தினாலும் பயப்படாதீர்கள். கர்த்தர் உங்களுக்குரிய பலனை தருவார். ஆண்டவரே நான் கடைசி வரை உழைத்துக்கொண்டே இருக்கவேண்டுமா என சோர்ந்து போகாதீர்கள். உங்களுடைய உண்மையை பார்த்து உழைப்பிற்கு ஏற்ற பலனை கர்த்தர் தருவார். நான் பல நல்ல காரியத்தை, பல உதவிகளை அநேகருக்கு செய்து இருக்கிறேன், எனக்கு எந்த பலனும் இல்லையே என வருந்தவேண்டாம். ஆண்டவர் ஏற்ற நேரத்தில் உங்களுக்குரிய பலனை தருவார்.

ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டான். ஈசாக்கு ஆசீர்வதிக்கப்பட்டான். யாக்கோபும் அவன் சந்ததி அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடைய கிரியைகளுக்குரிய பலனை அவர்கள் பெற்றனர். அவ்வாறு உங்கள் கிரியைக்குரிய பலனை உங்களுக்கும் கர்த்தர் தருவார். உங்கள் சந்ததிகளுக்கும் கர்த்தர் தருவார்.

## கர்த்தருடைய இராஜ்ய பாரத்தில் உங்களுக்குரிய பலன்!

ஆவிக்குரிய நன்மைகளை, பலனை எப்படி பெறுவது என்பதைக் குறித்து பார்ப்போம். முதலில், கர்த்தருடைய இராஜ்யத்தில் நாம் விதைக்கும் காணிக்கைகளுக்கு அவர் பலன் தருகிறார். தேவன் நம்முடைய ஜெபங்களுக்கும், கிரியைகளுக்கும் பலன் அளிக்கிறவராக இருக்கிறார். அதுமாத்திரமல்ல, அவருடைய இராஜ்ய பாரத்தில் நாம் செய்யும் அனைத்து காரியங்களுக்கும் அவர் பலன் அளிக்கிறவராக இருக்கிறார். அவருடைய இராஜ்ய பாரத்திற்காக நாம் என்ன செய்யமுடியும்?

முதலாவது அவருடைய இராஜ்யத்திற்கு என்று நாம் விதைக்கும் விதைகளுக்கு அவர் அறுவடையை பலனாக தருகிறார். இக்காலங் களில் வேதத்தில் கூறப்பட்ட வசனங்களை பலவிதங்களில் அர்த்தம் எடுத்துக் கொண்டு, தேவனுக்கு காணிக்கைக் கொடுப்பது அவசிய மில்லை என்று சொல்லுகிற கூட்டத்தார் அநேகராயிருக்கிறார்கள். ஆனால் நாமோ வசனங்களை ஆராய்ந்து பார்ப்போமென்றால் கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதுதான் நம்முடைய தலையாய கடமை என்பதை உணர்ந்துக் கொள்வோம். ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரைக்கும் தசமபாகங்களை குறித்தும் காணிக்கைகளைக் குறித்தும் எழுதப் பட்டுள்ளது. **உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். என 2கொரிந்தியர் 9:7** இந்த வசனத்தில் பத்து சதவீதம் தசமபாகத்தைக் காட்டிலும் குறைவாக கொடுத்தாலே போதுமானது என நினையா திருங்கள்.

உற்சாகம் என்று சொல்லும் பொழுது நம்மால் இயன்ற அளவுக்கு முழு மனதுடன் கொடுப்பதே ஆகும். உதாரணமாக **லூக்கா 21:1-4ல்** ஒரு ஏழை விதவை காணிக்கைப் பெட்டியில் இரண்டு காசுகளை போட்டதை பார்த்து இயேசுகிறிஸ்து அங்கீகரித்து, தம்முடைய சீஷர்களிடம் சொல்லுவதை பார்க்கிறோம். அதில் முக்கியமான தாற்பரியம் என்னவென்றால் அவள் தனக்கிருந்த எல்லாவற்றையும் அதாவது, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார். **லூக்கா 21:1-4** இதைத் தான் பவுல் உற்சாகமாய் கொடுப்பது என்று அர்த்தம் கொள்கிறார். **2கொரிந்தியர் 9:7-12ன்** படி நாம் கொடுக்கும்பொழுது அது சம்பூரண பலன் கொடுப்பதாய் இருக்கிறது. நான் **தெசலோனிக்கேயிலிருந்த போதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண் டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும் படியே நாடுகிறேன். பிலி.4:16-17** இங்கு பவுல் உபகாரத்தை நாடவில்லை, பலன் பெருகும் படியே நாடுகிறேன் என கூறுகிறார்.

ஆம் எனக்கன்பானவர்களே, தேவனு டைய இராஜ்யத்திற்கு என்று நம்முடைய பணத்தையும், பொருட்களையும், காணிக்கை களையும் நாம் விதைக்கும்பொழுது அது மிகுந்த பலனை கொடுப்பதாய் இருக்கிறது. அத்துடன் தேவனே அதை பெருகச் செய்கிறவராகவும் இருக்கிறார். **கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர் களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். லூக்கா 6:38** பல சமயங்களில் நாம் தேவனுக்கு கொடுப்பதையும், ஏழைகளுக்கு கொடுப்பதையும் ஒன்றாக நினைத்துக் கொள்கிறோம். ஆனால் வேதம் தெளிவாக அவற்றை பிரித்துக் காட்டுகிறது. அறுவடையின் முதல் பகுதியை நாம் தேவனுக்கு கொடுக்கவேண்டும். அதற்கு பின் வயலில் உள்ள எஞ்சியதை ஏழைகளுக்கு கொடுக்கவேண்டும். **(உபாகமம் 24:19-21)**

எனவே இன்றைக்கே கடந்த காலத்தில் நீங்கள் தேவனுக்கு செய்த பொருத்தனைகளை நினைத்துப் பார்த்து அவற்றை தேவனுக்கு செலுத்த மறவாதிருங்கள். **(சங்.66:14)** அப்பொழுது உங்களுடைய களஞ்சியம் நிரம்பும். தேவபிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நாம் கொடுக்கும்பொழுது தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நமக்கு திரும்பகொடுப்பார். **என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கு வார். பிலி.4:19**

அடுத்து காணிக்கை மாத்திரம் கொடுப்பதோடு நின்று விடாமல் சுவிசேஷத்தை அநேகருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். ஒரு ஆத்துமாவிற்கு சத்தியத்தை பற்றி சொல்லும் பொழுது அந்த ஆத்தமா மனந்திரும்பும். அவர்கள் இன்னொரு ஆத்துமாவிற்கு சத்தியத்தை சொல்லுகிறபோது அங்கு இரண்டாவதாக ஒரு ஆத்துமா சந்திக்கப்படுகிறது. இப்படி ஒரு ஆத்துமா. இரண்டு ஆத்துமா என ஆகி இறுதியில் ஏராளமான ஆத்துமாக்கள் கர்த்தரண்டை வருவார்கள். சுவிசேஷத்தை சொல்லாமல் இருக்காதீர்கள். பல இடங்களில் தடைகள் வந்துக் கொண்டே இருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தில் உங்கள் பங்கு என்ன? தேவனுடைய இராஜ்யத்தில் விதைத்து இருக்கிறீர்களா? அதில் கஷ்டம் வந்தால் பயப்படவேண்டாம்.

சுவிசேஷத்தை சொல்லுவதற்கு எந்தவொரு தாலந்தோ. திறமையோ நமக்கு தேவையில்லை. தேவன் உங்களுக்கு செய்ததை பிறருக்கு சொல்லுங்கள். அதுவே சிறந்த சுவிசேஷம். யாராவது ஒருவர் நமக்கு ஏதாவது ஒரு உதவியை செய்துவிட்டால் உடனடியாக நாம் பார்க்கிற அனைவரிடமும் அவரைப் பற்றி சொல்வோம் அல்லவா? அதைத்தான் நாம் செய்யவேண்டும் என தேவனும் விரும்புகிறார். சமாரியா பெண்மணி தன்னிடத்தில் இயேசு பேசியதை கிராமத்தில் உள்ளவர்களுக்கு அறிவித்ததுபோல. லேகியோன் பிசாசு பிடித்தவனும் தன்னை தேவன் விடுதலையாக்கியதை தெக்கப்போலி (10 பட்டணங்கள்) எங்கும் அறிவித்தது போல நாம் செயல்படவேண்டும். நாம் எத்தனைபேரிடம் சொல்லி இருக்கிறோம்? எதிர்ப்பு வந்தாலும் சோர்ந்துபோகாதீர்கள். அவருடைய சுவிசேஷத்தின் நிமித்தம் நீங்கள் இழந்து போகிற அத்தனையும் தேவன் உங்களுக்கு திரும்ப தருவார்.

ஒரு முறை பேதுரு ஆண்டவரே நோக்கி. நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றி வந்தோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என இயேசுவை நோக்கி கேள்வி கேட்டான். அதற்கு இயேசு சொன்னபதில். இம்மையிலே நூறத்தனையாகவும். மறுமையிலே ஜீவனையும் பெற்றுக் கொள்வீர்கள் என்றார். **(மத்.19:7-29)** நம்முடைய ஆண்டவர் அநியாயம் செய்கிறவர் அல்ல. இம்மையிலும் பலன் தருவார். மறுமையிலும் பலன் தருவார். **இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. வெளி. 22:12** கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒருநாளும் குறைந்து போகவிடமாட்டார். இனிகாலம் செல்லாது. கடைசி காலத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அந்தி கிறிஸ்துவின் காலத்திற்காக உலகம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. வேதத்தில் உள்ள தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஆகவே விழிப்பாயிருந்து. கர்த்தருடைய இராஜ்யத்திற்குரியவைகளை அதிகமாக நாடுங்கள். கர்த்தர் அதற்குரிய பலனை தந்து உங்களை ஆசீர்வாதமாய் வைப்பார். ஆவிக்குரிய நன்மைகளை அளவில்லாமல் தருவார். நீங்கள் விதைத்தது நாற்பதாக. அறுபதாக. நூறு மடங்காக பலனை தரும்.

**English WhatsApp No**
**+ 91 94889 32937**

# ஊழியம் மற்றும் கூட்டத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான வங்கி கணக்கு விபரங்கள்

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**
**2 கொரிந்தியர் 9:7**

**அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்**

**மணியார்டர் (MO) காசோலை (Cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

இந்த QR Code –ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்





**கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!**

## வங்கிக் கணக்குகளின் விபரம்

| ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS | Dr. ANANDA STIRA |
|---|---|---|
| A/c no. 10848559426 | A/c no. 10848474869 | A/c no. 10848469699 |

**IFS Code : SBIN0000930 State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக் கொள்ளுங்கள். Cell No : 94888 45627, 80987 42638
(10.00 AM - 6.00 PM)

**உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தைத் தாங்குங்கள்**

அன்பரின் ஊழியத்தின் முகவரி : **அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி– 620018

# S.J. SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து,
சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால்,
அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து,
உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். ஏசாயா 58:10**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சேளூர் செல்லப்பம்பாளையம், ஓலப்பாளையம், சின்ன மருதூர், ஜேடர் பாளையம், கருப்பண்ண நகர், பிலிக்கல்பாளையம், சாணர்பாளையம், மல்லிகாபுரம் ஆகிய ஊர்களில் உள்ள ஏழை, எளிய மாணவ,







மாணவியர்கள் முந்நூறு பேருக்கு **S J SAVES TRUST** மூலமாக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டது.

**Bro.** ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா அவர்கள் பிள்ளைகளை நேரில் சந்தித்து, அவர்களோடு பேசி, அவர்கள் நன்கு படிப்பதற்கான பல அறிவுரைகளை கூறி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அத்துடன் பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான அனைத்து கல்வி உபகரணங்கள் மற்றும் சில்வர் தட்டு, டம்ளர், டிபன் பாக்ஸ் போன்றவைகளையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியின் இறுதியில் பிள்ளைகளுக்கு பிரியாணி மற்றும் இனிப்பு கார வகைகள் தரப்பட்டது.

நம்மிடம் உதவி பெறுகிற பிள்ளைகள் அனைவரும் தாய் இல்லாதவர்கள், தந்தை இல்லாதவர்கள், ஒரு சிலருக்கு தாய், தந்தை இருவருமே இல்லாமல் தாத்தா பாட்டி அரவணைப்பில் வளருகிறவர்கள் மற்றும் ஏழை, எளிய குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவிகளை செய்து வருகிறோம்.

இந்த பணிக்கு உதவி செய்துக்கொண்டிருக்கிற அன்பு பங்காளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளை கூறிக்கொள்கிறோம். இந்த பணிகள் சிறக்க ஜெபியுங்கள். இந்த நற்பணிக்கு உதவிசெய்கிற உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து பெருகச் செய்வாராக!

## S.J. SAVES TRUST - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

**Bank A/C Name : S.J. Saves Trust**
**Account No : 019150310875369**
**Bank : Tamil Nadu Mercantile Bank, Palakarai, Trichy.**
**IFS Code : TMBL0000019**
**A/C Type : Current**

# குறுக்கெழுத்துப் போட்டி– I

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொ | மு | பு | கோ | க் | யா | ண் | து | ங் |
| அ | ன் | சீ | உ | ய் | ளி | யி | ம் | தோ |
| யா | கு | வ | து | கா | ட | த | லே | சி |
| டீ | ன் | வீ | லே | தெ | வ | மு | ச | ம் |
| ஜ | தா | லை | மே | ர் | பே | து | ரு | சோ |
| ஸா | த் | ஏ | ப | மொ | சா | நா | எ | ன் |
| ச் | ன | ன் | வே | ம | ர் | ஸ் | வா | மா |
| ஜ | யோ | சே | ப் | பு | த | வா | றி | ஜெ |
| சீ | ம் | மோ | தொ | ர் | ளு | யோ | கு | லா |

**வசன ஆதாரம்**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________
9. ____________________
10. ____________________

**பெயர் : ..........................................** **பங்காளர் எண்: ..................................**

**உங்கள் பதில்களை வட்டமிட்டு, வசன ஆதாரத்தை குறிப்பிட்டு, கீழ்க்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு போட்டோ எடுத்து அனுப்பி வைக்கவேண்டும்.**

**WhatsApp No.9597555066**

**சரியான பதிலை எழுதியவர்களுக்கு பரிசு வழங்கப்படும்**

1. பெரிய இரட்சிப்பினாலே உயிரோடே காப்பதற்காக முன்னமே அனுப்பப்பட்டவன் யார்?
2. பெரிய இரட்சிப்பைக் கண்டும் தாகத்தினால் நான் சாகவேண்டுமா என கர்த்தரை நோக்கி கூப்பிட்டவன் யார்?
3. பெரிய இரட்சிப்பை இஸ்ரவேலிலே செய்த இவன் "அன்றைக்கே சாகத்தான் வேண்டும்" என்று ராஜா கூறினான். இவன் யார்?
4. தன் பிராணனை கையிலே வைத்துக்கொண்டு எதிரியை கொன்றவனை முகாந்தரமில்லாமல் கொலை செய்ய ராஜா தேடினான். எதிரியை கொன்றவன் யார்?
5. தீர்க்கதரிசி தன் கைகளை ராஜாவின் கைகள் மேல் வைத்து அம்புகளை எய்ய சொன்னார். அதில் ஒன்று கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பு. அந்த ராஜா யார்?
6. இந்த காலத்தில் நீ மௌனமாயிருந்தால் இரட்சிப்பு வேறொரு இடத்திலிருந்து எழும்பும் என்று யாருக்கு சொல்லப்பட்டது? சொன்னது யார்?
7. இந்த இடங்களிலிருந்து கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டா யிருக்கும். அந்த இடங்கள் எவை? எவை?
8. தன் சகோதரனுக்கு பயந்து தன்னையும், தன் மனைவிகளையும், தன் பிள்ளைகளையும், தன் சகோதரன் முறியடிப்பான் என்று பயந்து, அவன் கைக்கு தப்புவியும் என்று கூப்பிட்டவன் யார்?
9. மேய்ப்பரின் கைகளுக்கு ஒரு குடும்பத்தின் சகோதரிகளை தப்புவித்த எகிப்தியன் யார்?
10. ஜனங்களின் எண்ணங்களுக்கு இவனை விடுதலையாக்க கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார். இவன் யார்?

# துதி அறிக்கை




## எங்களுடைய இரு மருமகள்களுக்கும் கர்த்தர் குழந்தை பாக்கியத்தைத் தந்தார்.

என்னுடைய மாமியார் அன்பரின் ஊழியத்தில் நீண்ட கால பங்காளராக இருந்து வருகிறார்கள். எங்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். இரு மகன்களுடைய திருமணமும் தேவ கிருபையால் சிறப்பாக நடந்து முடிந்தது. மூத்த மகனுக்கு திருமணம் முடிந்து 3 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. 2024ம் வருடம் வள்ளியூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு என்னுடைய இரண்டு மகன்களையும் மற்றும் இரண்டு மருமகள்களையும் அழைத்து வந்தேன். *Dr.* **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் மகன்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஐயா பிள்ளைகள் ஒவ்வொருவருடைய தலைமீதும் கைகளை வைத்து பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் அற்புதமாக இரங்கினார். இரு மருமகள்களுக்கும் கர்த்தர் ஆண் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். கர்த்தருக்கு கோடான கோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

**– திரு. ஸ்டீபன், வள்ளியூர்.**

## அரசு வேலை கிடைத்தது!



நான் அரசு வேலைக்காக பலமுறை எழுதிய தேர்வுகளில் எல்லாம் தோல்வியே அடைந்து வந்தேன். கடைசியாக தேர்விற்கு செல்வதற்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு *Dr.* **ஆனந்த ஸ்திரா.** *Mrs.* **மார்கிரேட் ஸ்திரா** இருவரிடமும் அரசு தேர்வில் வெற்றிபெற ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு இரங்கினார். தேர்வில் வெற்றிபெற்றேன். இன்டர்வியூக்கு செல்வதற்கு முன்பாகவும் அன்பரின் ஊழியத்திற்கு இ.மெயில் வாயிலாக தொடர்புக்கொண்டு ஜெபிக்கும்படி சொன்னேன். அரசு

வேலையில் சேருவதற்கு கர்த்தர் அற்புதமாக உதவி செய்தார். என்னுடைய முதல் மாத சம்பளத்தை அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கையாக தருகிறேன். தேவனுக்கே மகிமை!

**– திருமதி. மேரி பமீலா, நாகர்கோவில்.**

## இரத்த வாந்தி நின்றது!



நான் இரண்டாவது முறை கருவுற்றிருந்தப் பொழுது மூன்று மாதமளவும் தொடர்ந்து இரத்த வாந்தி எடுத்துக்கொண்டிருந்தேன். அதனால் அதிக பெலவீனத்துடன் காணப்பட்டேன். அந்த நேரத்தில் என் கணவர் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு சென்று எனக்காக ஜெபித்து விட்டு அங்கிருந்து ஜெப எண்ணெயை வாங்கி வந்தார்கள். நான் அந்த ஜெப எண்ணெயை விசுவாசத்துடன் என் வயிற்றில் தடவினேன். அந்த நாளிலிருந்து இரத்த வாந்தி நின்றுவிட்டது. அத்துடன் எனக்கு ஒரு புது பெலன் வந்தது. வீட்டில் எல்லா வேலைகளையும் நான் உற்சாகமாய் செய்ய ஆரம்பித்தேன். நல்ல சுகத்துடன் பெண் குழந்தையை பெற்றெடுக்கக் கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

**– திருமதி. கலா, ஒரத்தநாடு.**

## தடைகள் நீங்கியது புது வீடு வாங்கினோம்!



எங்களுடைய பழைய வீடு விற்பதற்காக நாங்கள் முயற்சி செய்தோம். விற்க முடியாதபடி நான்கு வருடங்கள் தடையாகவே இருந்தது. கடந்த வருடம் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். தனி ஜெப வேளையில் ***Mrs.* மார்கிரேட் ஸ்திரா** அவர்களிடம் என்னுடைய வீடு விற்பதற்காகவும், புது வீடு வாங்குவதற்காகவும் ஜெபிக்கும்படி சொன்னேன். அம்மா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். தற்பொழுது கர்த்தர் தடையை நீக்கி பழைய வீட்டை விற்பதற்கும், புதிய வீடு ஒன்று வாங்குவதற்கும் உதவி செய்தார். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன், ஸ்தோத்தரிக்கிறேன். ஐயா, அம்மா இருவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**– Sis. ராணி, சென்னை.**

**Tamil WhatsApp No**
**+ 91 95004 87059**

## Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே கானாவூர் திருமணத்தைப் போல எங்கள் மகளுடைய திருமணத்தை கர்த்தர் நடத்திக்கொடுத்தார்! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

எங்கள் மகளுக்கு 27 வயதாகியும் திருமணம் நடைபெறவில்லை. மகளை நன்கு படிக்க வைத்தோம். ஆனால் மகளை திருமணம் செய்து கொடுப்பதற்கான எந்த பண வசதியோ, நகையோ எதுவுமே இல்லாமல் இருந்தது. அந்த நேரத்தில் எனக்கும் கணவருக்கும் இடையே நல்ல புரிதல் இல்லாமல் வாழ்ந்து வந்தோம்.

2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் நானும் என் மகளும் நம்பிக்கையோடு கலந்துக்கொண்டோம். தனி ஜெப நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எங்களுடைய நிலையை சொல்லி மகளுடைய திருமணத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். ஐயா பாரத்துடன் ஜெபித்து விட்டு மகளுக்கு மூன்று மாதத்தில் திருமணம் நடைபெறும் என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள்.

ஐயா சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் என் மகளுடைய திருமணம் கானாவூர் திருமணத்தைப் போன்று சிறப்பான முறையில் நடைபெற்றது. மாப்பிள்ளை நல்ல ஒரு வேலையில் இருந்த பொழுதும், எங்களிடம் எந்த வரதட்சணையும் கேட்கவில்லை. திருமணசெலவும் அவர்களே பார்த்துக்கொண்டார்கள். மகளுடைய திருமணத்திற்கு தேவையான நகை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை எங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களே வாங்கிக் கொடுத்தார்கள். இவ்வாறு மகளுடைய திருமணத்தை அற்புதமாக நடக்கச் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறோம். இப்பொழுது மகளுக்கு ஒரு வயதில் மகன் இருக்கிறான்.

**– திருமதி. லெட்சுமி, கோவில்பட்டி**


Level Up

புதிய நேரலை நிகழ்ச்சி

நாள்: ஆகஸ்ட் 21, 22, 23

நேரம்: மாலை 7:00 மணி

Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்

Ministry of Jesus channel- லில்

தவறாமல் பார்த்து மகிழுங்கள்!


திருநெல்வேலியில்
ஆசீர்வாதத்தின் மாலைக்கூட்டம்
நாள் : செப்டம்பர் 14 திங்கள் கிழமை (அரசு விடுமுறை)
நேரம் : மாலை 5:30 மணி
இடம்: கிரேஸ் ஹால்
LIC பில்டிங் (புதிய பேருந்து நிலையம் அருகில்)
திருநெல்வேலி.
தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா Dr. ஜேன் ஜாஷ்வா
தொடர்புக்கு : 94888 45627


we are
HIRING
Join
OUR TEAM
CORRESPONDENCE
(Any UG/PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil,English)
DRIVER
SEND YOUR RESUME TO
ministryofjesushr@gmail.com


அனுதின அற்புதம்
DAILY MIRACLE
MINISTRY OF JESUS
தினமும் காலை
5 மணி
அந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக்
காணலாம்.

# ஆகஸ்ட் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு. (2 நாளாகமம் 15:7)

02 இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். (சங்கீதம் 127:3)

03 பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது. (நீதி.8:19)

04 நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம். (நீதி.11:30)

05 தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். (நீதி.22:4)

06 என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது. (ஏசா.49:4)

07 உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும். (ஏசா.61:7)

08 அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது. (ஏசா.62:11)

09 கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன். (எரே.17:10)

10 ... விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன். (எசே.36:30)

11 பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். (மத்.5:12)

12 சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது. (லூக்கா 8:8)

13 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர் களாயிருக்கிறார்கள். (லூக்கா 8:15)

14 நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். (ரோமர் 6:22)

15 நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். (லேவி.26:4)

16 உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. (ரூத் 2:12)

17 கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும். (சங்.85:12)

18 உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய். (பிர.11:1)

19 உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனை அநுபவிப்பார்கள். (ஏசா.3:10)

20 தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான். (மத்.10:41)

21 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். (ரூத் 2:12)

22 நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். (மத்.10:41)

23 சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்.... (மத்.10:42)

24 கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். (யோவான் 12:24)

25 ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். (ஆதி.26:12)

26 உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள். (1பேதுரு 1:9)

27 தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். (எபி.11:6)

28 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், ...அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். (லூக்கா 6:35)

29 நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார். (ஏசா.30:23)

30 உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (2யோவான் 1:8)

31 அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. (வெளி.22:12)

# அவசர தேவை (Urgent Need)

**நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லையென்று திட்டம்பண்ணிக்கொண்டோம். (நெகேமியா 10:39)**







அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டப்பட்டு சுமார் 15 வருடங்களாகிறது. வருடங்கள் செல்லச் செல்ல கட்டிடம் பழுது அடைவதால் அதை சீரமைப்பதும் அவசியமாகிறது. சமீபத்தில் ஜெப ஸ்தலத்தின் மூன்று பக்க வெளிப்புற சுவர்கள் பழுதுபார்த்து வர்ணம் பூசப்பட்டது. இன்னும் முன்பக்கத்தில் (Front side) பழுதுபார்க்கவோ, வர்ணம் பூசவோ ஆரம்பிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இதற்கிடையில் ஜெப ஸ்தலத்தின் ஒரு பகுதியான ஊழியர்கள் பயிற்சி அறையில் போடப்பட்ட தளத்தின் 80 சதவீதம் செராமிக் டைல்ஸ் எதிர்பாராத விதத்தில் அனைத்தும் மேலே தூக்கிவிட்ட நிலையில் இருக்கிறது. அத்தனையும் எடுத்து சரிபார்த்து தளம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஊழியர்கள் பயிற்சி அறை முழுவதுமாக தளம் போட்டு சீரமைக்க சுமார் 3 முதல் 4 இலட்சம் ரூபாய் வரை தேவைப்படுகிறது.

அத்துடன் ஜெப ஸ்தலத்தின் முன்பக்கம் சாரம் அமைத்து, பழுது பார்த்து, வர்ணம் பூச சுமார் 10 முதல் 12 இலட்சம் வரை தேவைப்படுகிறது. இந்த தேவைகளுக்காக ஜெபியுங்கள். மேற்கூறப்பட்ட இரண்டு பணிகளுக்கும் சேர்த்து சுமார் 15 இலட்சம் வரை தேவைப்படுகிறது. கர்த்தர் உங்கள் மனதில் ஏவுவாரானால் இந்த நல்லப்பணிக்கென்று உங்கள் மனப்பூர்வமான நன்கொடைகளை மற்றும் காணிக்கைகளை அனுப்பி தாங்கும்படி மிகுந்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு காணிக்கைக்கும் நாங்கள் ரசீது அனுப்பிவிடுவோம். **இந்த சீரமைப்பு பணிக்காக நீங்கள் காணிக்கை அனுப்பியவுடன் 9500487061 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள். அதே எண்ணிற்கு Google Pay, Paytm, PhonePe மூலமாகவும் காணிக்கை மற்றும் நன்கொடைகள் அனுப்பலாம்.**

**பணம் அனுப்ப வேண்டிய வங்கி விவரம்**

***MINISTRY OF JESUS***

***A/C NO. 10848474869***

***State Bank Of India, Cantonment,***

***Trichy Main Branch / IFS code: SBIN 0000930***

# உலகச் செய்திகள்

கேரளாவின் வயநாடு மாவட்டம் மீண்டும் ஒரு நிலச்சரிவை சந்தித்துள்ளது. இந்த சம்பவம் நம் நாட்டையே உலுக்கியுள்ளது. கல்லாடி பகுதியில் நடைபெற்று வந்த இரட்டை சுரங்கப்பாதை கட்டுமானத் திட்டப்பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் குறைந்தது 5 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். மேலும், மண்ணுக்குள் யாரேனும் சிக்கியிருக்கிறார்களா என்பதை உறுதி செய்ய தேசிய பேரிடர் மீட்புப் படை, தீயணைப்பு துறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் இணைந்து தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்த சம்பவம் இயற்கையாக ஏற்பட்ட பேரிடரா அல்லது மனித அலட்சியத்தால் நிகழ்ந்த விபத்தா என்ற கேள்வி தற்போது கேரள அரசியலிலும், பொது மக்களிடையிலும் கடுமையான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

❇❇❇❇❇

இந்தியாவில் மிகவும் **கடினமான தொழில்முறை தேர்வுகளில்** ஒன்றாக கருதப்படும் சி.ஏ. தேர்வில் வெற்றி பெறுவது **ஆயிரக்கணக்கான மாணவர்களின் கனவாக** உள்ளது. இந்த தேர்வில் வெற்றி பெறுவதற்காக பலர் **லட்சக்கணக்கில் செலவு செய்து கோச்சி**ங் சென்டர்களில் பயிற்சி பெறுகின்றனர். ஆனால், **எந்தவித கோச்சிங் வகுப்புக்கும் செல்லாமல்,** முழுக்க முழுக்க சுயமாக படித்து **CA Foundation 2026 தேர்வில் அகில இந்திய அளவில் 2வ**து இடத்தை பிடித்துள்ளார் மகாராஷ்டிராவைச் சேர்ந்த **அயான் அப்பாஸ் அலி அஜானி. அவரது** இந்த சாதனை, "வெற்றிக்கு விலையுயர்ந்த பயிற்சி மையங்கள் மட்டுமே வழி **அல்ல, விடாமுயற்சி**யும் திட்டமிட்ட உழைப்பும் இருந்தால் போதும்" என்பதை **மீண்டும் நிரூபித்துள்ளது.**

❇❇❇❇❇

பூமிக்கு அடுத்தபடியாக **மனிதன் குடியேற துடிக்கும் ஒரே கிரகம்** செவ்வாய். நிலவுக்குச் சென்றது ஒரு வரலாற்று சா**தனை என்றால், செவ்வாய் கிரகத்திற்கு மனித**னை அனுப்புவது என்பது மனித இனத்தின் அடுத்த பரிணாம வளர்ச்சி. அமெரிக்காவின் நாசா தொடங்கி, எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் வரை பல முன்னணி அமைப்புகள் இதற்காகத் தீவிரமாக உழைத்து வருகின்றன. அடுத்த இருபது ஆண்டுகளில் மனிதன் செவ்வாய் கிரகத்தில் தடம் பதிப்பான் என்று விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகிறார்கள். அங்கு செல்வது என்பது வெறும் பயணம் மட்டுமல்ல, பூமியை தவிர்த்து இன்னொரு கிரகத்தில் மனித நாகரீகத்தை நிலைநாட்டுவது இந்த மிகப்பெரிய திட்டத்திற்குப் பின்னால் இருக்கும் சவால்கள் மற்றும் அங்கு மனிதர்கள் எப்படி வாழ்வார்கள் என்பது குறித்த எதிர்பார்ப்புகள் பல கோடி மக்களிடையே பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளன.

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்

*(New Month Blessing Meeting)*

**ஆகஸ்ட்**
**1**
**சனிக்கிழமை**

இடம்: டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
தில்லைநகர், திருச்சி–18

நேரம்
மாலை 6:00 மணி முதல்
இரவு 8:30 மணி வரை

தேவ செய்தி

Rev.Dr.A. ஜாஷ்வா, Dr. ஜேன் ஜாஷ்வா
Bro. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

குறிப்பு : கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்

தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்
காலை 9.30 மணி – 11.30 மணி

- அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ஆவிக்குரிய தேவ செய்தி
- உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

எவ்விதமான வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்குபெற அன்புடன் அழைக்கின்றோம்

Live @ My Deliverance Church



டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.



# CAMERA MAN & VIDEO EDITORS

(Any UG/PG Candidates)

Skills Required : with adequate experience
Able to work in Adobe Premiere Pro & After Effects

Male / Female, Christians Preferred, Accommodation will be provided

**Apply to: ministryofjesushr@gmail.com**

# செகந்திராபாத்தில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்



**ஆகஸ்ட் 15** (சனிக்கிழமை)

காலை 9:30 மணி முதல் மதியம் 2:30 மணி வரை

YMCA ஆடிட்டோரியம்
மணிக்கூண்டு மற்றும்
யசோதா மருத்துவமனை அருகில்,
செகந்திராபாத்

தேவ செய்தி: Dr. ஜேசன் ஜாஷ்வா
Bro. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

Contact MOJ office
Cell: 99445 36343, 94888 45627
Local contact - Cell:76740 61601

# திருச்சியில்

## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**ஆகஸ்ட் 29 சனிக்கிழமை**

காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை



தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா**

குடும்பத்தினர்

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு) தில்லைநகர், திருச்சி.

தொடர்புக்கு : செல் 9488845627
0431- 2741925

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்

*(New Month Blessing Meeting)*

நாள்: செப்டம்பர் 01 செவ்வாய் கிழமை
நேரம் : மாலை 6:00 மணிமுதல் இரவு 8:30 மணி வரை

இடம்: டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18

தேவ செய்தி: Rev.Dr.A. ஜாஷ்வா குடும்பத்தினர்



குறிப்பு : கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்

தொடர்புக்கு : செல் 99421 66066 & 94888 45627

## மூளை நரம்புவலி நீங்கியது!



எனக்கு இரண்டு கண்களிலும் லேசர் சிகிச்சை நடைபெற்றது. அதன் பிறகு மூளை நரம்பில் அதிக வலி வேதனை இருந்துக் கொண்டே இருந்தது. திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். ஜெப வேளையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் மூளை நரம்பு வலியோடு வந்திருக்கிறவரை கர்த்தர் குணமாக்கு கிறார் என தீர்க்கதரிசனமாக சொன்ன பொழுது என்னுடைய மூளை நரம்புவலி நீங்கியது. எங்களுடைய குடும்பத்தில் இறந்த ஒரு நபர் வீட்டிற்குள் படுத்திருப்பதைப் போல இரண்டு நாட்கள் தொடர்ந்து நான் கனவு கண்டேன். அதை நினைத்து நான் வருந்தி தஞ்சாவூர் கூட்டத்திற்கு வந்து ஜெபித்துக் கொண்டிருந்தப்பொழுது, பாஸ்டர் அதையும் தீர்க்க தரிசனமாக சொல்லி பிசாசின் நடமாட்டம் நீங்கும்படி ஜெபித்தார்கள். இப்பொழுது நல்ல சுகத்துடன், சமாதானத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.**

## சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலையானேன்!



எங்கள் குடும்பத்தில் சத்துருவின் பேராட்டத்தினால் நாங்கள் அனைவரும் நீண்ட நாட்களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். அதனால் என் குடும்பத்தினர் மற்றும் என் தம்பி அதிகம் பாதிக்கப்பட்டார்கள். தம்பியினால் தனியாக நடக்கமுடியாது. இன்னொருவர் துணையுடன் தான் நடக்க முடியும். அந்த அளவிற்கு பெலவீனமாக இருந்தார். ஜெப நேரத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் என் தம்பியின் தலை மீது கைகளை வைத்து ஜெபித்தார்கள். இப்பொழுது யாருடைய துணையும் இல்லாமல் தம்பி நன்றாக நடக்கிறார். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.



**- திரு. ஆனந்தன், அரியலூர்.**

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


கன்னியாகுமரி மாவட்டம் மாங்கரையில்

# நற்செய்தி பெருவிழா

நாள் : ஆகஸ்ட் 7, 8, 9
வெள்ளி, சனி, ஞாயிறு
நேரம்: மாலை 6:00 மணி

இடம்: C.S.I. ஆலய வளாகம்
மாங்கரை திருச்சபை
கன்னியாகுமரி திருமண்டலம்



தொடர்புக்கு : Revd. J. ஹெரால்டு அனித்
(சபை ஆயர்) 94872 64204

குறிப்பு: 8ம் தேதி சனிக்கிழமை
காலை 10 மணிக்கு பெண்களுக்கான
சிறப்பு கூட்டம் நடைபெறும்.

தேவ செய்தி
*Rev.Dr.A.* ஜாஷ்வா & *Dr.* ஜேன் ஜாஷ்வா
(அன்பரின் ஊழியம், திருச்சி)

# சென்னையில் பங்காளர்கள் சந்திப்பு



நாள்
ஆகஸ்ட் 26
புதன்கிழமை (அரசு விடுமுறை)

நேரம்
காலை 9:30 மணி முதல்
மதியம் 12:30 மணி வரை

இடம்: எண்.7 திரு.வி.க. தெரு, ராஜேஷ்வரி நகர் விஸ்தரிப்பு
(கனரா பேங்க் ATM அருகில் மற்றும் பாலகிருஷ்ணா
டெக்ஸ்டைல் பின்புறம்) 100 அடிசாலை, கேம்ப் ரோடு,
சேலையூர், சென்னை–73

ஆலோசனையும் ஜெபமும்: *Rev.Dr.A.* ஜாஷ்வா

குறிப்பு: கூட்டத்தில் பங்குபெறுகிறவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்தித்து,
ஜெப விண்ணப்பங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
தொடர்புக்கு : செல் : 94431 95900, 9488845627


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,